செய்தி வெளியீட்டு எண்.1154 நாள்: 31.12.2010

## மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் சுற்றுலாத்துறையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சுற்றுலா காப்பாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, சுற்றுலா வண்ண மாதாந்திர நாட்காட்டியினை வெளியிட்டார்

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பான பயணம் செய்யும் வகையில் அமைதிப் பூங்காவாக தமிழகம் விளங்கி வருகிறது. இதற்கு உதாரணமாக கடந்த 2006ம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 2010ம் ஆண்டுவரை ஆண்டுக்கு ஆண்டு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

2008ஆம் ஆண்டு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் 6 இலட்சத்து 26 ஆயிரத்து 180 பேர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 20 ஆயிரத்து 400 பேர், 2009ஆம் ஆண்டு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் 7 இலட்சத்து 80 ஆயிரத்து 370 பேர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 23 ஆயிரத்து 690 பேர், 2010ஆம் ஆண்டு உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் 8 இலட்சத்து 88 ஆயிரத்து 330 பேர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 24 ஆயிரத்து 880 பேர் தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இந்திய அளவில் சுற்றுலா வளர்ச்சி ஒப்பீட்டில் தமிழகம் முன்னிலையில் உள்ளது. வெளிநாட்டுப்பயணிகள் வருகையில் தமிழகம் முதலிடமும், உள்நாட்டுப்பயணிகள் வருகையில் தமிழகம் மூன்றாம் இடமும், மருத்துவச் சுற்றுலா பயணிகள் வருகையில் தமிழகம் முதலிடமும் வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை மேலும் அதிகரிக்கும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவையில் சுற்றுலா காப்பாளர்கள் என்ற தனி அமைப்பு ஏற்படுத்தப்படும் என்ற அறிவித்தார். அதற்கிணங்க, தமிழக சுற்றுலாத் தளங்களில், சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, மாமல்லபுரம், உதகமண்டலம், இராமேஸ்வரம், கொடைக்கானல், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ஒரு நிலைய சுற்றுலா காப்பாளரும், ஐந்து சுற்றுலா காப்பாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர். முதல் கட்டமாக, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஐந்து சுற்றுலா காப்பாளர்களுக்கு இன்று (31.12.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மேலும், சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளில் ஒன்றாக ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டு தினத்தில் தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து சுற்றுலா வண்ண மாதாந்திர நாட்காட்டியினை வெளியிட்டு வருகிறது. கடந்த 2009ம் ஆண்டு தமிழ்நாட்டின் வன உயிரின வளம் தாங்கிய நாட்காட்டி வெளியிடப்பட்டது. 2010ம் ஆண்டு தமிழ்நாட்டின் இயற்கைச் செழுமையான தலங்கள் கொண்ட நாட்காட்டி வெளியிடப்பட்டது. 2011ம் ஆண்டு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் சுமார் 1000 கி.மீ. தொலைவு கொண்ட நீண்ட எழில்மிகு தோற்றப் பொலிவு கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரைத் தலங்களின் வளத்தைத் தெரிவித்திடும் நோக்கில் சென்னை மெரினா கடற்கரை, மாமல்லபுரம் கடற்கரை, ஆலம்பாறை கடற்கரை, சில்வர் பீச் கடற்கரை, தரங்கம்பாடி கடற்கரை, நாகப்பட்டினம் கடற்கரை, தனுஷ்கோடி கடற்கரை, அரிமன்முனை கடற்கரை, உவரி கடற்கரை, கன்னியாகுமரி கடற்கரை, முட்டம் கடற்கரை, தேங்காப்பட்டினம் கடற்கரை ஆகிய கடற்கரை தலங்கள் கொண்ட எழில்மிகு நாட்காட்டியினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (31.12.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் வெளியிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு என்.சுரேஷ்ராஜன் அவர்கள், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை அரசு செயலர் மற்றும் தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிகழகம் திரு சோ. சு. ஜவஉறர் அவர்கள் சுற்றுலா இயக்குநர் மற்றும் நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.**